
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1237

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

# மாநாடு

ர.பிரகாசு

120

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**



ஓவியம் : சிகரன்

## பெரியாருக்கு சிலை அமைக்க நிதி!

*1944-ஆம் ஆண்டு, ஜூலை 8, 9 ஆகிய நாட்களில் நெல்லை மாவட்ட முதலாவது திராவிட இளைஞர் மாநாடு நடைபெற்றது. இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கீழ சண்முகபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த 'டாக்டர் நாயர் பந்தலில்' மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 8-ஆம் தேதி மாலை 4 மணிக்கு ரயில் நிலையம் வந்தடைந்த பெரியாரை, பாண்டு வாத்தியங்கள் முழங்க, முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். மாலை 6 மணிக்கு ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடைந்தவுடன், சென்னையைச் சேர்ந்த பி.ஜனார்த்தனன், கொடியேற்றி வைத்தார். பின்னர், பெரியார் மாநாட்டைத் திறந்துவைத்து ஒரு மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.*

*அதன்பிறகு, எஸ்.ஓ.வெற்றிவேல் வரவேற்புரை வாசித்தார். மாநாட்டுத் தலைவர் கே.ஏ.அன்பழகன் (பேராசிரியர்) சொற்பொழிவுடன், முதல் மாநாடு இரவு 10 மணிக்கு முடிவுற்றது. மறுநாள் காலை 9 மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. நாகம்மையாரின் சேவைகள் பற்றி மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும், சர் ஏ.டி.பன்னீர்செல்வம் குறித்து மணியம்மையாரும் நீதிக்கட்சித் தலைவர்களான பனகல் அரசர், நாயர், சர் பிட்டி.தியாகராயரைப் பற்றி பொன்னம்பலனாரும் விரிவாகப் பேசினர். அதன்பிறகு, எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்து, ஒரு மணி நேரம் உரையாற்றினார் பெரியார். பின்னர், பெரியார் அங்கிருந்து புறப்பட்டு திண்டுக்கல்லுக்குச் சென்றார்.*

*அதன்பிறகும் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. பேரறிஞர் அண்ணாவின் பணிகள் குறித்து, குடந்தை எஸ்.கே.சாமியும் பெரியாரின் பணிகள் குறித்து, பாவலர் பாலசுந்தரமும் அரைமணி நேரம் இளைஞர்கள் மத்தியில் விளக்கிப் பேசினர். மதிய உணவுக்குப் பிறகு, மாலை 4 மணிக்கு மீண்டும் மாநாடு கூடியதும், திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்து, 'திராவிட நாடு' லட்சியம் குறித்து நாவலர் நெடுஞ்செழியன் பேசினார். பின்னர், பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இறுதியாக, மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் திராவிட மக்களின் கடமைகள் குறித்துப் பேசினார்.*

*பின்னர், அதே மாநாட்டுத் திடலில் இரவு 9.30 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. பரமன்குறிச்சி முத்தையன் பெருமாள் தலைமையில், நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் சுமார் 6 ஆயிரம் பேர் பங்கேற்றிருந்தனர். ஒலிபெருக்கி வசதிகள் செய்யப்பட்டு இருந்தன. திராவிட மக்களின் எதிர்கால நிலை குறித்து, ஜனார்த்தனன், பேராசிரியர் அன்பழகன், நாவலர் நெடுஞ்செழியன், என்.கே.சாமி, அருப்புக்கோட்டை பழனிச்சாமி ஆகியோர் பேசினர். இறுதியாக, மாநாடு ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த டி.தங்கையா நன்றி கூற, நள்ளிரவு 1.30 மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவுற்றன. இந்தப் பொதுக் கூட்டத்தில், நெல்லை ஜில்லா திராவிடர் கழகத்திற்கு நிர்வாக உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.*

*அத்துடன், சென்னையில் பெரியாருக்கு சிலை நிறுவ, இந்தப் பொதுக்கூட்டத்தில் நிதி வசூலிக்கப்பட்டது. 55 ரூபாய் 8 அணா 11 காசுகள் மக்கள் நிதி வழங்கினர். மேலும் 95 ரூபாய் தருவதாகவும் அக்கூட்டத்தில் சிலர் உறுதியளித்தனர். அதன்படி சென்னையில் பெரியாருக்கு சிலை அமைக்க, அன்றைய தினம் 150 ரூபாய் 8 அணா 11 காசுகள் வசூலானது.*

**....கூட்டம் திரளும்**

---

## உ.பி.யில் மீண்டும் தலைதூக்கும் உணவு அரசியல்!

உத்தரப் பிரதேச மாநிலத்தில், சிறுபான்மைச் சமூகத்தைக் குறிவைத்து நடைபெறும் தாக்குதல்களின் அடுத்த கட்டமாக, ஷாம்லியில் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், மாட்டிறைச்சி சமைக்கப்பட்டதாகக் கூறி, மணமகன் மற்றும் அவரது உறவினர்களைக் காவல் துறையினர் கைதுசெய்துள்ளனர்.

அந்த திருமண நிகழ்ச்சிக்கு வருபவர்களுக்குத் தயார் செய்யப்பட்டிருந்த உணவை போலீஸார் அப்புறப்படுத்தியதுடன், மணமகன் தரப்பினர் மீது பல்வேறு சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளதும், சமூக ஆர்வலர்கள் மற்றும் சிறுபான்மையினர் மத்தியில் கவலையை உருவாக்கியுள்ளது.

உணவுப்பழக்கம் என்பது தனிப்பட்ட உரிமையாகவும் பல நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்படும் கலாசாரமாகவும் இருக்கும் சூழலில், இதுபோன்ற அதிரடி நடவடிக்கைகள் மூலம் முஸ்லிம் சமூகத்தினருக்கு மேலும் அழுத்தம் தர யோகி அரசு தயாராகிவிட்டதாக மக்கள் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளனர்

ஒரு மகிழ்ச்சியான மணவிழாவின்போது, உணவு தொடர்பான சர்ச்சைகளைத் தூண்டி, மணமக்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை இக்கட்டான சூழலுக்குத் தள்ளுவது, அவர்களின் உரிமைகளை மறுப்பதாகவே அமைகிறது என்றும், சட்டத்தின் பெயரால் இத்தகைய தலையீடுகள் ஒரு சமூகத்தின் மீதான அடக்குமுறையாகவே பார்க்கப்படுகிறது என்றும் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

---

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் பெற்ற பிறந்தநாள் வாழ்த்து!


எம்.இ.தேவநிதி

2016-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ஆம் தேதி, எனது மகன் கருணாநிதி அவர்களின் பிறந்தநாளின்போது, முத்தமிழறிஞர் கலைஞரிடம் வாழ்த்துப் பெற அழைத்துச் சென்றிருந்தேன். முன்னாள் எம்.பி. வசந்தி ஸ்டேன்லி, என் துணைவியார் சந்தானலட்சுமி, மகள் ரசிகா ஆகியோரும் சென்று தலைவரிடம் வாழ்த்துப் பெற்றது மறக்க முடியாத நினைவு.

**- எம்.இ.தேவநிதி,**
**தலைமைக் கழகப் பேச்சாளர், எழும்பூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


---

# பாசறை படிப்பகம்

கௌதம் ராஜ்

120

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## அணைகள், அரண்களா... முரண்களா?

*'வரப்புயர நீர் உயரும்*
*நீர் உயர நெல் உயரும்*
*நெல் உயரக் குடி உயரும்*
*குடி உயரக் கோல் உயரும்*
*கோல் உயரக் கோன் உயர்வான்' என்ற ஔவையாரின் செய்யுள் எவ்வளவு பெரிய உண்மை என்பதை சுனில் அம்ரித் எழுதிய 'Unruly Waters' என்ற நூல் தெளிவாக உணர்த்துகிறது.*

*தெற்காசிய நாடுகளில் குறிப்பாக, இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றுப் போக்கைத் தண்ணீர் எப்படி எல்லாம் மாற்றியமைத்தது, அது மக்களின் வாழ்க்கை முறையில், பழக்க வழக்கங்களில், அவர்களின் பண்பாட்டு-சமூக - பொருளாதாரத்தில் எத்தகைய மாற்றங்களை நிகழ்த்தியது என்பதை மிகவும் ஆழமாகப் பேசுகிறது இந்நூல்.*

*இந்தியாவில் காலநிலை ஒரு நிச்சயமற்ற தன்மையைக் கொண்டது. அது முழுக்க முழுக்க பருவமழையை நம்பித்தான் இயங்கிவருகிறது. ஒரு சில பகுதிகளைத் தவிர, பிற இடங்களில் நிரந்தரமான நீர்ப்பாசனம் இல்லை, பருவ மழையை நம்பித்தான் வாழ்வாதாரம். அந்தப் பருவநிலை, கடல் மற்றும் நிலத்திற்கு இடையே நிலவும் தட்பவெப்ப மற்றும் அழுத்தத்தைப் பொறுத்து மாறுபடும். ஓர் ஆண்டில் நல்ல மழை இருக்கும் சில ஆண்டுகள் எதிர்பார்த்த அளவு மழை இருக்காது. அதன் காரணமாக பஞ்சம், பட்டினி எனப் பெரும் பாதிப்புகளை இந்தியத் துணைக்கண்டம் சந்தித்துவந்தது.*

*பிரிட்டிஷ் வருகைக்கு முன்பிருந்தே இத்தகைய சிக்கல்கள் இருந்தாலும், ஆங்கிலேயர்கள் இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண முயன்றார்கள். பஞ்சம் பட்டினியைத் தடுக்க, நீரைச் சேமிக்க வேண்டும், ஆற்றில் இருந்து கடலில் வீணாக்கப்படும் தண்ணீரைப் பாதுகாத்தாக வேண்டும்; என்று அணைகள், பாசன வசதிகள் போன்றவற்றைக் கட்டமைத்தார்கள்.*

*விடுதலைக்குப் பிறகான இந்தியாவில், நேருவுக்கு முன் மிகப்பெரிய பணி இருந்தது. அதில் முக்கியமான ஒன்று கட்டமைப்பு வசதி. அதிலும் குறிப்பாக, நீர்ப்பாசன வசதி. ஒருபுறம் தொழில்நுட்பத்தில் அக்கறை செலுத்தினாலும் மற்றொருபுறம் அணைகள் கட்டுவதில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். அவரின் கனவுத் திட்டமான பக்ரா-நங்கல் அணையைக் கட்டமைத்தார். அதன் திறப்பு விழாவில், "இதுபோன்ற அணைகள் இந்தியாவின் ஆலயங்கள்" என்று புகழாரம் சூட்டினார்.*

*அதே சமயத்தில்தான், சீனாவும் அணைகளைக் கட்டத் தொடங்கியது. 1950-களில் தொடங்கி, இன்றுவரை ஆசியக் கண்டத்தில் மட்டும் இலட்சக்கணக்கில் அணைகள் கட்டப்பட்டிருக்கும் என்கிறார் நூல் ஆசிரியர். அதன் முக்கியக் காரணம், பருவநிலை நிச்சயமின்மையும் நீரை சேமித்தாக வேண்டும் என்ற கட்டாயமும்தான். மேலும், 1980-களுக்குப் பிறகு மின்சார தயாரிப்புக்குத் தண்ணீர் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாகப் பெரிய அளவில் Hydroelectric plants உருவாக்கப்பட்டன.*

*இத்தகைய அணை கட்டமைப்புகள், நீரைச் சேமிக்க உதவினாலும் மற்றொருபுறம் பல்வேறு பாதிப்புகளை உண்டாக்கின. அந்தப் பகுதியில் ஓடும் நதிகளைப் பலவீனப்படுத்தியது, கிரீன்ஹவுஸ் வாயுக்களை உற்பத்தி செய்தது. பெருவாரியான மக்கள் இடம்பெயர்க்கப்பட்டார்கள், காடுகளில் வசிக்கும் ஆதிக்குடிகள் பல்வேறு இன்னல்களைச் சந்தித்தார்கள். செயற்கையாக அணைகள் அமைப்பதன் சாதக பாதகங்களை இந்நூல் கவனப்படுத்துகிறது.*

*நீரின் வழியாக இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றுப்போக்கையும், இங்கு நடந்த மாற்றங்களையும் அருமையாகப் பதிவு செய்துள்ளது இந்நூல். நீரை மையமாகக் கொண்டு சமகால அரசியலை நோக்க விரும்பும் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.*

**...வாசிப்போம்.**

---

## கருவூலம்

### மக்கள் மத்தியில் அண்ணா!

1957-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வானார். அவருடைய தொகுதியில் உள்ள தண்டலம் எனும் கிராமத்தில், ஒரு மாநாடு கூட்டி, அன்றைய முதல்வர் காமராசர் அவர்களை வரவழைத்து, மக்களைச் சந்தித்து உரையாட வைத்தார். இதற்கு முன் எவரும் இப்படிச் செய்யவில்லை. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு, 'தண்டலம் மாநாடு' மூலமாக இலக்கணம் வகுத்தவர் பேரறிஞர் அண்ணா. இருபது முப்பது கிராமங்களைக் கொண்ட பகுதியின் மையமான கிராமத்தில், இரண்டு மூன்று நாட்கள் முகாமிட்டு, மக்கள் குறைகளை நேரில் கேட்டறிந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900